# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

✆ 28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com



மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச்செய்தி எண் 04/2018

நாள் 23.01.2018

மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச்செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடகச் செய்தி

ஊடகச் செய்தி

## 'பேருந்து கட்டண உயர்வு' வட்டக்கிளை தோறும் கண்டனம் முழங்கிடுவீர்!

**தமிழக அரசு மக்கள் மீது தொடர் தாக்குதல்களின் ஒரு பகுதியாக பேருந்து கட்டணங்களை மிகக் கடுமையாக உயர்த்தி மக்களின் துயரங்களை அதிகரித்துள்ளது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய கதையாக கட்டண உயர்விற்கு காரணமாக போக்குவரத்து தொழிலாளர்களின் சம்பள உயர்வை காரணம் காட்டியுள்ளது கண்டனத்திற்குரியது !!**

தமிழக அரசு மக்கள் மீது தொடர் தாக்குதல்களின் ஒரு பகுதியாக பேருந்து கட்டணங்களை மிகக் கடுமையாக உயர்த்தி மக்களின் துயரங்களை அதிகரித்துள்ளது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய கதையாக கட்டண உயர்விற்கு காரணமாக போக்குவரத்து தொழிலாளர்கள் சம்பள உயர்வை காரணம் காட்டியுள்ளது கண்டனத்திற்குரியது.

போக்குவரத்து ஊழியர்களின் பணத்தை திருடி நிர்வாகம் செய்தவர்கள், மக்கள் பணத்ததை கட்டண உயர்வின் மூலம் கொள்ளையடிக்க முனைந்துள்ளனர்.

கட்டண உயர்வு நகரங்களில் ஏறத்தாழ இரட்டிப்பாகி உள்ள நிலையில், குறைபாடுகளுடன் அமலாக்கப்பட்ட ஊதிய மாற்றத்தால் ஊழியர்கள் பெற்ற குறைந்தபட்ச ஊதிய உயர்வும் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது.

கட்டண உயர்விற்கு எதிராக மாணவர்கள், வாலிபர்கள், மாதர்கள், தினக்கூலிகள் என பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தின் சகல தரப்பும் போராட்டக் களத்தில் உள்ளனர்.

சமூக பிரக்ஞை உள்ள சங்கமாக செய்லபடும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இந்த அராஜக கொள்கைக்கு எதிராகவும் உணர்வுகளை வெளிப்படுத்தி மக்களின் அணியில் நிற்க வேண்டியது வரலாற்றுத் தேவையாகும்.

எனவே, தொடரும் போராட்டங்களின் ஒரு பகுதியாக முதற்கட்டமாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் கட்டண உயர்வை முற்றாக கைவிடக்கோரி அனைத்து வட்டக்கிளைகளிலும் நாளை(24-01-2018) சக்திமிகு கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட உள்ளது.

(மு. அன்பரசு)
பொதுச் செயலாளர்